**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure/ BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC No.280/2026 | Date | : | 25.05.2026 |
| Deposition of Witness for | : | **அ.சா**.2 | Taluk | : | |
| Name | : | **சதீஷ்குமார்** | Calling | : | |
| Father Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 25.05.2025

(எதிரிகள் ஆஜர் இல்லை, எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகளின் சார்பில் BNSS பிரிவு 355—ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஈரோடு மாவட்டம் புத்தூர் புதுப்பாளையம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.02.2026 ஆம் தேதி 15.00 மணி சுமாருக்கு எனது அலுவல் வேலையாக மேட்டுக்கடை பஸ் ஸ்டாப் அருகில் வந்த போது ஒரு ஆம்னி வேன் அருகில் குடிமைபொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத்துறை ஆய்வாளர் நின்று கொண்டு ஒரு நபரை விசாரித்துக் கொண்டிருந்தார். நான் என்னவென்று பார்க்க அருகில் வந்து ஆய்வாளரிடம் விசாரித்தபோது, 09.02.2026 ஆம் தேதி சிவகிரி பகுதியில் செயல்பட்டு வரும் ராமலிங்கம் என்பவருக்கு சொந்தமான அரசு ஒப்பந்த அரவை ஆலையில் பொது விநியோகத் திட்ட ரேஷன் அரிசியை கைப்பற்றி வழக்கு பதிவு செய்திருப்பதாகவும், ரேஷன் அரிசியை பொதுமக்களிடமிருந்து விலைக்கு வாங்கி வந்து மேற்படி ராமலிங்கம் என்பவருக்கு சொந்தமான அரசு ஒப்பந்த அரவை ஆலைக்கு விற்ற நபரான தாம்சன் என்ற நபரை பிடித்துள்ளதாகவும், அதற்கு என்னை சாட்சியாக இருக்கும்

படியும் கேட்டுக்கொண்டார். தாம்சன் என்பவரை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும் அவர் இன்று நீதிமன்றத்தில் இல்லை.

2. பின்னர் அந்த நபரை ஆய்வாளர் விசாரிக்க அவர் என் முன்னிலையில் தன்னுடைய பெயர் தாம்சன் என்கிற தாமஸ், த/பெ.சித்திரை பாண்டியன், மேட்டூர் மெயின் ரோடு, சித்தார், கேசரிமங்கலம் என்று கூறியும், TN 10 1417 என்ற பதிவு எண் கொண்ட ஆம்னி வேன் தன்னுடையது என்றும், கொடுமுடி, சாலைப்புதூர், தாமரைப்பாளையம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள பொதுமக்களிடமிருந்து ரேஷன் அரிசியை குறைந்த விலைக்கு வாங்கி சிவகிரியில் உள்ள ராமலிங்கம் என்பவருக்கு சொந்தமான தோட்டத்தில் உள்ள காரை களத்தில் கொட்டி வைத்ததையும் 09.02.2026 ஆம் தேதி இரவு அவர் கொண்டு வந்து கொடுத்த ரேஷன் அரிசியை புட் செல் போலீசார் மற்றும் அதிகாரிகள் கைப்பற்றி மில்லியன் ஓனர் ராமலிங்கம் மற்றும் மேனேஜர் குழந்தைவேல் ஆகியோர்களை ஈரோடு புட்ஸ் அலுவலகத்திற்கு கூட்டி சென்று விட்டதாக தகவல் கிடைத்து எங்காவது தப்பி சென்று விடலாம் என்று நினைத்தவரை ஆய்வாளர் பிடித்ததாகவும் கூறி, தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட வரை கைது செய்வதற்கான காரணத்தை கூறி மதியம் 15.00 மணிக்கு ஆய்வாளர் கைது செய்தார்.

3. மேலும் எதிரி தாம்சன் என்கிற தாமஸ் என்பவர் எவ்வித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் இன்றி தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என்னையும் தலைமை காவலர் லோகநாதன் என்பவரையும் சாட்சிகளாக வைத்து 15.00 மணி முதல் மடிக்கணினியில் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை பிரதி எடுத்து எதிரியிடமும் எங்களிடமும் சாட்சியாக கையொப்பம் பெற்றார். என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி தாம்சன் என்கிற தாமஸ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மற்றொரு கையொப்பம் லோகநாதன் என்பவருடையதாகும்.

**(எதிரி தாம்சன் என்கிற தாமஸ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

1. போலீசார் ஒரு நபரை பிடித்து விசாரித்துக் கொண்டிருந்ததாக கூறியுள்ள நிலையில் அந்த சமயத்தில் போலீசார் சீருடையில் இருந்தார்களா என்றால் இல்லை. நான் அந்த சமயத்தில் எங்கிருந்து வந்தேன் என்றால் புங்கம்பாடியில் இருந்து மேட்டுக்கடை நோக்கி வந்தேன். வேன் ஒன்றை பிடித்ததாக சொல்லியுள்ள நிலையில் அதன் நிறம் என்னவென்றால் ஞாபகம் இல்லை. நான் சென்றபோது வேனுக்குள் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் மூன்று நபர்கள் இருந்தார்கள். (பின்னிட்டு சாட்சி வேனுக்குள் இரண்டு நபர்கள் இருந்ததாகவும் கீழே ஒரு நபர் நின்று கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கிறார்) மேற்படி வேனுக்குள் யார் இருந்தார்கள் என்றால் இரண்டு போலீசார் இருந்தார்கள். தாம்சன் அப்போது எங்கு இருந்தார் என்றால் வேனுக்கு வெளியே இருந்தார்.

2. ஒப்புதல் வாக்குமூலத்தை யார் தயார் செய்தார்கள் என்றால் போலீசார் ஒருவர் மடிக்கணினியில் தயார் செய்தார் அவர் பெயர் தெரியவில்லை. போலீசார் அங்கு எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் மூன்று போலீசார் இருந்தார்கள். எங்கு வைத்து என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் அந்த இடத்திலேயே கையொப்பம் பெறப்பட்டது. எங்கு வைத்து ஒப்புதல் வாக்குமூலம் பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் கையொப்பம் செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்திற்கு செல்லவில்லை என்றும், அங்கு வைத்து கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுக் கொண்டதற்காக மேற்படி கையொப்பத்தை செய்துள்ளேன் என்றும், எதிரி தாம்சனை நான் பார்க்கவில்லை

என்றும் அரசு அலுவலர் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.05.25 17:12:52 +0530

Judicial Magistrate No.III,

Erode.